உ

மீனாட்சிதுணை.

மதுரைவீர சுவாமிபேரில்

தோத்திரம்

எஸ். பி. இராஜாராம் அவர்களது

சென்னை சூளை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

1923,

45

கடவுள் துணை.

மதுரைவீரசுவாமிபேரில் தோத்திரம்.

காசியில்பிறந்ததும் மாலையதுபூண்டதும் கானகந்தனிற் சென்றதும், கனமதுரை மீனாட்சி தன்னருள் வரம்பெற்றதும் கலியுகதெய்வமாகி, ஆசைபொன்னாபரணம் தேசம்புகழ்ந்திட அறையில்கிறை கிண்கிணியுமாம், அங்கெங்குந் தெய்வமா யெங்குந்துதித்திட ஆசையுடன் பூசைவாங்கும், தேசந்திரிந்துமே ஆசையுடன் தொழுதாலும் தென்மதுரைக் கீடாகுமோ, தேவனேயுன்மீதில் ஆசைகவிபாடிடத் தெரிசனந் தந்தருளுவாய், மாசகமதனிலென்ன மறதிபிழையிருந்தாலும் வரந்தர மனமிதங்குவாய், வளந்தேர செல்வமும் தளர்ந்திடா தாண்மையும் வரந்தரும் மதுரை துரையே. க

உத்திரதேசத்தில் உயர்ந்ததொரு காசியில் உற்பத்தியான துரையே, உன்னுடைய கீர்த்தியை யென்னாவில் விளங்கவும் உருவமும் நானறிகிலேன், க்ஷத்திரியவம்மிசம் விளங்கவேபிறந்திட்ட சந்திரகுலராசன் மகனே, சதாநித்யம் உன்பாதம் அர்ச்சித்த பேர்களும் சாயுச்சியமுத்திபெறுவார், பத்திரம்கொண்டுநீ

மதுரைமீனுட்சிதன் பாதத்தை அர்ச்சித்துமே, பறி தான வேன்புரவி தனில்மீதிலேறியே பாலனெனைக் கார்க்க வருவாய், சிற்றிறம்போலொத்த ரத்தினப் பொம்மியரை செவ்வனே சிறையெடுத்தாய், சிவன் மதுரை சொக்கரிட பாதத்தை அர்ச்சித்து செயம் பெற்ற மதுரைதுரையே. உ

தட்டியுஞ்சல்லடமு மிட்டவதரித்தங்கி தரித்த தொரு சாலுவையுமாய், தனகனக பொன்பெற்ற சரி கைதுப்பட்டியுந் தங்கத்தின் கைக்கடகமும், அட்டி யில்லாமலே யிட்டதொரு பாதக்கொறடு ஆபரணம் அபரஞ்சி கைக்கடகமும், ஆறுபொன் மாற்றுள்ள நிறமான மேனியும் ஐயன்விபூதி யழகும், கூடிய கச் சையொடு செங்கையில் பீதாம்பரம் கழுத்தினில் முத் தாரமும், கதிரவன் ஒளிபோல மகுடமுந் தரித்து யென் கண்ணெதிரில் வந்தருளுவாய், எட்டுதிசைதனி லுள்ள துஷ்டப் பிசாசுகளை யெடுத்துமே கிழித்தெ றிந்தாய், ஏவிவரும் முனிகளை தாவிவரும் பேய்களை எடுத்தெறியும் மதுரை துரையே. ந

வல்லயம் வாளம்பு கட்டாறி வளைதடி வரிசை யுடன் தெண்டுகொண்டு, வடிவான மதுரைதுரை சக் கராயுதங்கொண்டு வந்தென்னை ரட்சிக்கவும், கொல்லி

மலைவேங்கையைநீ ஓடிபில்லியேவலைக் குறுக்கவே மெரித்தவீரா, கோவென்று கூச்சலிட் டேவல்பிசாசு களைக் கொன்றுகழு வேற்றிவைத்தாய், அல்லிதுரை மறவரைக் கள்ளரைஜெயித்துமே அனைவருடன் கீர்த்திபெற்றாய், அன்பான பொம்மியரும் கனமதுரை வீரய்யனும் அழகுபுரவிதனிலேறியே, கலியுகம்தன்னிலே மெய்யானதெய்வமே என்கர்மவினை தீர்த்து வைப்பாய், காசியில்பிறந்துமே தென்மதுரை யாண்டவா கர்த்தனே மதுரைதுரையே. ௪

பட்டயம் நேரிசம் சங்கிலிப் பரிசைவாள் பாங்கான சுத்திகொண்டு, பகைத்ததொரு கள்ளரைக் கறுவறுத்திடவென்று பரிதனில் மீதேறியே, சட்டை செய்யாமலே வெகுகோடிமறவரைச் சாதித்தமதுரை வீரா, சாலவே உன்பாதம் நம்பினேன் அடியேனைக் கார்க்ககெதி அருளவருவாய், அட்டயம் ஆனதொரு சுக்குமாந்தடிகொண்டு அறுங்கானகத்தைவிட்டு, அதட்டியேவந்திடும் மதுரைநகர் தேசிகா அடங்காத இராஜதீரா, பட்டயம் வேள்புரவி தனில்மீதிலேறியே பாலகனைக் கார்க்கவருவாய், பட்சமா யென்தனுடன் பக்கலில் வந்திடும் பார்தனில் மதுரைதுரையே. ரு

மந்திரம்தந்திரம் பகையானசூனியம் மாளவே கறுவறுத்தாய், மதுரைமீனாட்சி அருள் வரம்பெற்ற தேசிகாமைந்தனைக்காக்கவேணும், அந்திரமானதொரு மந்திரபீஜாட்சரம் ஆதிமுதல்மாரரஷ்டகம், அன்பானகன்னடயம் தொட்டியம்லாடயங்களை அநேக விதபாஷை அறிவாய், தொந்தமாம் தென்மதுரை சொக்கரிடகோவிலில் தோராதபூசைவாங்கும். தோளிலேகிண்ணாரம் வைத்துமே யெந்தனுடன் துயர்தனைத்தீர்க்கவருவாய், தந்திரம்செய்திட்ட சத்துருக்கள் தனைவென்று தரணிதனில கீர்த்திபெற்றாய், தயவாகவரந்தரும் கடகம்வளர்ந்தவா பாலனான்மதுரை துரையே.

இன்பமாய் பொம்மியரும் கனமதுரை வீரய்யனும் யிடியம்புதடிகருப்பும், யேகவள்ளம்சூழ் வானவர்நடுங்கிட யிருபுறமும்கவுரிவீச, பன்மானமதுரை துரை மண்டலீகர்சூழ்ந்திடப் பாலனைக்கார்க்க வருவாய், பருவட்டமானதொரு ஆலவட்டங்களோடு பலகலையறிந்ததுரையே, உம்பர்கோன பதம்பெற்று உத்தமிஅருள்பெற்று உலகினில்கீர்த்திபெற்று, உன்னுடையமகிமையை விளங்கிடபூமியில் உருவமாய்வந்துகார்ப்பாய், தன்பெருமைபுகழ்ந்திடும் பூமிதனில்

மனிதர்கள் தைரியமழிக்கவென்று, தயவாகசக்கரம் கைதனில்வாங்கியே தலைவாசல்தான்வரும் தாஷ்டீக மதுரைதுரையே. எ

அண்டங்களதிரவே வெகுபேர்நடுங்கவே ஆகாசம்நெக்குவிடவே, அதிர்ந்திடபூமியுங் கலங்கிட ஆழியம் அரசனும்பயணமிடவே, முண்டங்கள் முறையிடக் கண்டங்கள்கரைந்திட முரசுகள் தான்முழங்க, மும்மாடஒட்டியம் வெகுகோடிசல்லியம் முனையரிந்திட்ட துரையே, மண்டைகளுருண்டிட தேசங்கள் பொடிபட மன்னர்துரைபரிமீதிலே, மட்டுப்படாததொரு காளிகள்நடுங்கிட மகாதேவமதுரைதுரையும், தண்டமூதண்டமாய் பூமிகளதிர்ந்திட தற்கார்க்க வந்தருளுவாய், தையலுடபாகனே பொம்மிமணவாளனே தரணிபுகழ்மதுரை துரையே. அ

உன்னாலேயென்வினையர் உலகத்தில் உன்கீர்த்தி உறைத்துமேநானிருக்க, உண்மையாம் குறைவில்லா வரங்களைத்தந்துமே உகந்துடன்கார்த்திருப்பாய், முன்னாலேநான்செய்த கருமத்தைநீக்கியே முத்திபெற மோட்சந்தருவாய், முத்துவீரய்யனே ரத்தினக்கருப்பனே மூலமாய்நின்ற துரையே, அன்னாளில் நான் சொன்ன ஆசைகவியுன்மீதில் அய்யனே பிழையிருந்

தால், ஆதரித்தெந்தனிட பிழைதனைப்பொருத்துமே அன்புடன்காத்தருளுவாய், என்னாலேயாவதுயாதொன்றுமில்லையேயிணையடியை அருள்வென்று, என்னேரம்வந்துநான் உன்பாதம்நம்பினேன் யின்பமாய்மதுரைதுரையே. கூ

அவ்வென்றுநானுன்னைத் தினமும்துதித்திட அருள்தரவந்தருளுவாய், ஆதரித்துந்தனிட பாதத்தை நம்பிநான் அடியிணைச்சரணமென்றேன், தவமென்று சஞ்சலம் வினைதீர்க்கவந்தருள் தானனமதுரைதுரையே, தன்னுடையகீர்த்தியை யென்னால் விளங்கவும் தைரியந் தந்தருளுவாய், யவ்வென்று மதுரைதுரை மலையாளதொட்டியனே வந்தென்னைரட்சித்திடும், வட்டமாஞ்சக்கரம் கைதனில்வாங்கியே வந்தென்னை காத்தருளுவாய், பவ்வென்று அருள்தர யெந்தனைக் கார்க்கவே பரிதனில் மீதேறியே, பட்டவர்த்தனர் சூழ அடியேன்முன்வந்திடும் பராக்கிரம மதுரை துரையே. கo

பத்துமேலொருகவி யிஷ்டமாய்ப் பாடினேன் பாலனான் மதுரைதுரையே, பட்சமாய் வுன்பாதம் அர்ச்சிக்கயென்னாலே பலபுத்தியும் நானறிகிலேன், முத்துமுத்தையனே ரத்தினவீரய்யனே மோட்சமே

தந்தருளுவாய், மூடனுன் உன்மீதில் பாடினேன் ஆசைகவி மூலமேபிழையிருந்தால், சித்தத்தில்வந்துநீ தெரிசனம்தந்துமே சிரியனைக்காத்தருளுவாய், செல்வனே யென்னுடைய அருமைதனைநீக்கியே செல்வத்தைநீ தருகுவாய், யெத்தேசகாலமும் அடியேனைவிட்டகலாமல் ஏழையிடங்கொளுவிருப்பாய், எண்ணுந்துதித்தேன் தென்மதுரைஅன்னநகர் பொன்மதுரை கார்த்த மதுரைதுரேயே கக

மதுரைவீரசுவாமிபேரில் தோத்திரம்

முற்றிற்று.

எமது கம்பெனி பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். பி. இராஜாராம், கம்பெனி,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.